**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 558/2004**

Deposition of P**.W.-2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 24.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பழனிவேலு Father's Name : குட்டியண்ணன்

துவக்க நேரம் : 12.12P.M

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**:

1. நான் தற்பொழுது தலைவாசல் வட்டம், வடசென்னிமலை பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நாவக்குறிச்சி கிராமத்தில் உள்ள தாவா கோவில்களில் 5 கோவில்கள் எனது நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது. எனது கட்டுப்பாட்டில் இருக்கும் மேற்படி 5 கோவில்களில் 4 கோவில்களுக்கு என்னை தக்காராக நியமனம் செய்து இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அவர்கள் 16.09.2021 தேதியில் செ.மு.ந.க.எண்.3463/2021-88/2020/ஆ 2/16.09.2021 ன் படி பிறப்பித்த உத்தரவாணையின் உண்மை நகலை தற்பொழுது தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **Ex.X1 (4 ஆணைகள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அருள்மிகு நைனபூர்ண பெருமாள் கோவில் நாவக்குறிச்சி என்ற திருக்கோவிலின் அறங்காவலர் நியமன பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **Ex.X2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 5 கோவில்களில் அரசாங்கத்தால் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி 5 கோவில்களுக்கும் தனிப்பட்ட சமுதாயத்திற்கு நிர்வாக உரிமை இல்லை. மேற்படி 5 கோவில்களின் நிர்வாக உரிமை தக்கார் ஆகிய என்னிடம்தான் உள்ளது.

3. மேற்படி கோவில்களுக்கு சொந்தமாக மானிய நிலங்கள் உள்ளது. மேற்படி நிலங்களும் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளது தற்பொழுது அந்த நிலங்கள்

பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கோவில்களில் திருவிழாக்கள் நடத்தும் அதிகாரம் யாரிடம் உள்ளது என்றால் இந்து சமய அறநிலையத்துறையிடம்தான் உள்ளது. கடந்த 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான் பணியில் சேர்ந்த பிறகு இதுவரை மேற்படி கோவில்களில் திருவிழாக்கள் எதுவும் நாங்கள் நடத்தியதில்லை. கிராம மக்கள் சார்பாகவும் திருவிழா நடைபெறவில்லை. என்னை தக்காராக நியமனம் செய்த பின்னர் நாவக்குறிச்சி கிராமத்தின் சார்பாக ஏதேனும் ஆட்சேபனை செய்யப்பட்டதா என்றால் இல்லை.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க வேண்டுகோள் வைக்கப்பட்டது, வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.31 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D. Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.558/2004, Dt.29.04.2025.